Ts-8T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2022**

**வகுப்பு 8**

நேரம்: 1.30 மணி

**தமிழ்**

மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .............

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) இயற்கையைப் போற்றுதல் தமிழர் .............

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டவர் .............

அ) பாரதியார் ஆ) தந்தை பெரியார்

இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

4) செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது .............

அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

5) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ............. மதிக்கின்றனர்.

அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

**II. சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) கோழி ............. (கூவும் / கொக்கரிக்கும்)

2) பால் ............. (குடி / பருகு)

3) சோறு ............. (தின் / உண்)

4) பூ ............. (கொய் / பறி)

5) ஆ ............. (நிரை / மந்தை)

**III. சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 2×1=2

1) வேடிக்கை .............

2) தமிழ்மொழி .............

**IV. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் எட்டுக்கு மட்டும் விடையளி:** 8×2=16

1) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது.

2) உலகம் எவற்றால் ஆனது?

3) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

4) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

5) ஓவிய எழுத்து என்றால் என்ன?

6) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

7) வினைமுற்று என்றால் என்ன?

8) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

9) மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

10) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**V. கீழ்க்கண்ட மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக:**

1) ''வாழியவே! என முடியும் வாழ்த்துப்பாடலை எழுதுக. 4×1=4

2) தக்கார் எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக. 2×1=2

**VI. குறுவினாவிற்கு விடையளி:** 1×4=4

1) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

**(அல்லது)**

2) கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

**VII. நெடுவினாவிற்கு விடையளி:** 6×1=6

1) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**VIII. கட்டுரை எழுதுக:** 6×1=6

1) நான் விரும்பும் கவிஞர் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்கு பாராட்டுக் கடிதம் எழுதுக.

----------

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com